**இப்பாகமுவ பிரதேச சபை - 2023**

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இப்பாகமுவ பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, இப்பாகமுவ பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றுமஉள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிர்மாண வேலை கடன் கொடுத்தோர் ரூபா 64,526 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை. | அடுத்த ஆண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானியத்தின் கீழ் நிறைவேற்றப்பட்டிருந்த 07 நிர்மாண வேலைகளுக்காக ரூபா 854,980 இற்கான தொகை 2023 | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டின் போது மீளளிப்பு செய்யப்பட்டிருந்த போதிலும், அந்த பெறுமதி கடன்பட்டோர் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (இ) | பெற வேண்டிய நிலையான வைப்பு வட்டி ரூபா 778,904 தொகை கணக்கீடு செய்திருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | சபைக்குச் சொந்தமான 05 காணிகளின் பெறுமதி ரூபா 590,000 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) | ரூபா 153,377 தொகை பெறுமதியான பலவின கடன்கொடுத்தோர் கணக்கீடு செய்திருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஊ) | சபைக்குச் சொந்தமான 30 காணித் துண்டுகளின் பெறுமதி ரூபா 16,206,000 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (எ) | 2023 ஆண்டின் போது வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த 10 நிர்மாண வேலைகளின் பெறுமதி ரூபா 8,673,505 தொகையினை மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஏ) | 2023 ஆண்டின் போது வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த 05 நிர்மாண வேலைகளின் பெறுமதி ரூபா 778,324 தொகை மிகையாக மூலதனப்படுத்தப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஐ) | 2023 ஆண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 1,922,100 தொகைக்கான 04 நிலையான சொத்து விடயங்கள், நிலையான சொத்துக்கள் எனவும் மற்றும் நடைமுறை சொத்துக்களின் களஞ்சிய விடயங்கள் எனவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஒ) | நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் அடங்கியுள்ள 10 காணிகள் மற்றும் கட்டிடங்கள் மீளாய்வாண்டளவிலும் பெறுமதி மதிப்பீடு செய்யாமையால் காணி மற்றும் கட்டிடங்கள் என கணக்கீடு செய்திருக்கவில்லை. | - மேற்படி - | சபைக்குச் சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்கள் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

#### 1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 12,356,376 தொகைக்கான 02 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே ரூபா 53,500 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | வித்தியாசத்திற்கான காரணங்களை இனங்கண்டு நாட்குறிப்பின் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | வித்தியாசத்திற்கான காரணங்களை இனங்கண்டு சரி செய்ய வேண்டும். |

#### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 9,165,071 தொகைக்கான 08 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வதற்கு முடியாதிருந்ததது. | முன்னைய ஆண்டுகளில் இருந்து வரக்கூடிய மீதிகளும் இதில் காணப்படுவதனால் எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.7 இணங்காமை

#### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணங்காமைகள் | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| | நிதிப் பிரமாணம் 571(2) | 02 வருட காலத்தை மிகைத்துள்ள ரூபா 1,043,710 இற்கான பலவின வைப்புக்கள், உடன்படிக்கை வைப்புக்கள், டென்டர் வைப்புக்கள், நடைபாதை கடை வைப்புக்கள் மற்றும் நீர் வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 02 வருடங்களை மிகைத்துள்ள பலவின வைப்புக்கள், உடன்படிக்கை பிணை வைப்புக்கள் மற்றும் டென்டர் பிணை வைப்புக்கள் 2024 ஆண்டின் போது நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2002 பெப்ரவரி 25 திகதிய 01/2002 இலக்கம் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கை | சபைக்குச் சொந்தமான 31 வாகனங்களில் 25 வாகனங்கள் தொடர்பாக தாபனத்தின் பெயர் மற்றும் அரச இலச்சினை பதியப்பட்டிருக்கவில்லை. | எதிர் காலத்தில் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என. | அரச இலச்சினையுடன் நிறுவனத்தின் பெயரும் பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் பிரிவு 06 (ஆ) மற்றும் (இ) | 2023 ஆண்டின் போது புதுப்பிக்கப்பட்ட வேண்டிய 16 சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரங்கள் புதுப்படுத்தி இருக்காமையால் சபைக்கு சாட்டப்பட்டுள்ள சுற்றாடலை ஒழுங்குறுத்தும் பொறுப்பினை புறக்கணித்திருந்தது. | அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டும் என அறிவிக்கப்பட்டது என. | சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2023 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையில் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 57,238,181 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 33,796,101 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | ஆண்டு 2023 | | | | ஆண்டு 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| i. | வீதவரி மற்றும் வரி | 4,040 | 40,064 | 5,185 | 4,960 | 4,024 | 4,024 | 5,114 | 6,376 |
| ii. | வாடகை | 8,336 | 19,639 | 12,366 | 2,909 | 11,300 | 11,783 | 12,856 | 3,396 |
| iii. | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 1,525 | 1,525 | 1,525 | - | 2,200 | 2,179 | 2,179 | - |
| iv. | ஏனைய வரு மானங்கள் | 102,904 | 88,170 | 89,365 | 89,259 | 11,315 | 9,550 | 67,046 | 28,652 |
| | மொத்தம் | 116,805 | 149,396 | 108,441 | 97,128 | 28,839 | 27,536 | 87,195 | 38,424 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 15 கடையறைகள் தொடர்பாக 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கடை வாடகை மீதி ரூபா 106,350 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குறிப்பிட்ட நிலுவைத் தொவை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | வீதவரி ஆதனங்கள் 05 வருடங்களுக்கு ஒருமுறை பெறுமதி மதிப்பீடு செய்து அதன்படி வீதவரி கட்டணம் அறவீடு செய்யப்பட்டிருந்த போதிலும் பிரதேச சபையினால் பெறுமதி மதிப்பீட்டு ஆதனங்கள் 2012 ஆண்டிலேயே இறுதியாக பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மூலம் குறிப்பிட்ட அறிக்கை கிடைத்த பின்னர் அறவீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என. | புதிய பெறுமதி மதிப்பீட்டை பெற்றுக்கொண்டு வீதவரி அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 18 சொத்துக்களை வாடகைக்கு கொடுப்பதன் மூலம் அறவிடப்பட வேண்டிய குத்தகை மீதி ரூபா 2,131,450 தொகை ஆக்கக் காணப்படுவதுடன், அந்த குத்தகையை அறவீடு செய்திருக்கவில்லை. | நிலுவை தொகை தொடர்பாக கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டு அறவீடு செய்ய முடியாத நிலுவைகளை கௌரவ ஆளுனரின் அனுமதியின் பின்னர் பதிவழிப்பதற்கு மற்றும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவைத் தொகையை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | கணக்காய்வுத் திகதியாகிய 2023 திசெம்பர் 31 திகதி அளவில் ஹிரிபிடிய மாட்டிறைச்சிக் கடை நிலுவைத் தொகை ரூபா 155,000 தொகை காணப்பட்டிருந்ததுடன், அந்தத் தொகையை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குறிப்பிட்ட நிலுவைத் தொகையை விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவைத் தொகையை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் சாட்டப்பட்டிருந்த கருமங்களை நிறைவேற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக சேதனப்பசளை செயற்களமொன்று நிர்மாணித்தல் மற்றும் குப்பைகளை சேகரிப்பதற்காக ரூபா 10,318,653 | குப்பை முகாமைத்துவம் செய்யும் குறிக்கோளுடன் நிர்மாணிக்கப்பட்டிருந்த சேதனப் பசளை செயற்களங்களின் நடவடிக்கைகள் தற்போது பூர்த்தி | குப்பை முகாமைத்துவம் மேற்கொண்டு வருமானத்தை சேகரிப்பதற்கு |

| | | |
|---|---|---|
| தொகை மூலதனச் செலவொன்று மற்றும் ரூபா 22,712,931 இற்கான மீண்டுவரும் செலவும் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அந்த செயற்திட்டம் 2023 திசெம்பர் 31 திகதி அளவிலும் பூர்த்தி செய்வதற்கு சபைக்கு முடியாமல் இருந்தது. அதன்படி, சேகரிக்கப்படுகின்ற குப்பைகளிலுந்து சேதனப் பசளை உற்பத்தி செய்யப்படவில்லை எனவும், மற்றும் கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலைய வளவில் கிடங்குகளில் இடப்பட்டு மூடப்படுகின்றது எனவும், சேகரிக்கப்படுகின்ற பிளாஸ்டிக், காட்போட், பொலிதீன் மற்றும் கழிவுப் பொருட்கள் முகாமைத்துவ நிலைய வளவில் தற்காலிகமாக நிர்மாணிக்கப்பட்டிருந்த குப்பை செயற்களத்தில் களஞ்சியப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | செய்து சேதனப் பசளை உற்பத்தியை எதிர் காலத்தில் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது எனவும், உக்காத குப்பைகளை பேல் இயந்திரத்தின் மூலம் விற்பனை அலுவல்களுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என. | நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இப்பாகமுவ நகரத்தில் தேசத்திற்கு மகுடம் செயற்திட்டத்தின் கீழ் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த வாராந்த சந்தை 2023 திசெம்பர் 31 திகதி அளவிலும் திறக்கப்பட்டு சந்தை அலுவல்கள் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன், இந்தக் கட்டிடத்திற்காக 2023 ஆண்டின் ஜனவரி முதல் திசெம்பர் 31 திகதி வரை ரூபா 2,385,176 தொகை அறவிடப்பட்டு நீர் வழங்கல், மின்சாரம் வழங்கல் மற்றும் நுழைவுப்பாதை தயாரித்தல் ஆகியவற்றிற்காக செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | வியாபாரிகளின் தீவிர எதிர்ப்பின் மத்தியில் இது தோல்வியடைந்திருந்ததுடன், தற்போது பல்வேறு விற்பனவு மேம்படுத்தல் நிகழ்ச்சித் திட்டங்களுக்காக பணம் பெற்றுக்கொண்டு வழங்கப்படுவதுடன், மாற்றுச் சந்தையொன்று நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என. | வாராந்த சந்தையை திறந்து சந்தை அலுவல்களை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | கொகரெல்ல உப அலுவலகத்திற்கு சொந்தமான மெல்சிரிபுரவில் அமைந்துள்ள 04 ஆம் இலக்க கடையறையின் உடன்படிக்கைக் காலம் 2020 திசெம்பர் 31 திகதி முடிவடைந்திருந்த போதிலும், வாடகையாளர் காணக்காய்வுத் திகதி வரை கடையை நடாத்திச் செல்வதனால், உடன்படிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உடன்படிக்கை மேற்கொள்ளல் உரிய முறையில் மேற்கொள்ளப்படாமையால் உள்ளூராட்சி ஆணையாளரின் ஆலோசனையின் பின்னர் தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என. | உடன்படிக்கைக்கு இணங்க செயற்படுதல் அல்லது புதிய உடன்படிக்கைக்கு அணுகுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கணிப்பீட்டின் மூலம் இனங்காணப்பட்ட அனைத்து வியாபார நிலையங்கள் கைத்தொழில்கள் மற்றும் திறன்தொழில்களை ஆவணப்படுத்தியிருக்காததுடன், அனுமதிப்பத்திரக் கட்டணத்திற்காக பணம் செலுத்தும் அவ்வாறான வியாபாரங்கள், கைத்தொழில்கள் மற்றும் திரண் தொழில்கள் மாத்திரம் பதிவேட்டில் உட்படுத்தப்பட்டிருந்தது. | உடன்படிக்கை மேற்கொள்ளல் உரிய முறையில் மேற்கொண்டிருக்காததுடன், புதிய பெறுமதி மதிப்பீட்டின் படி விரைவாக உடன்படிக்கைகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | இனங்காணப்பட்ட அனைத்து வியாபாரங்களும் ஆவணப்படுத்த வேண்டும். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான காணப்படுகின்ற 19 காணிகள் மற்றும் கட்டிடங்களை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தை சேர்ந்த காணிகள் மற்றும் கட்டிடங்களை உரித்தாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என. | சபைக்குச் சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்களை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.5 வாகன முறைமை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஏனைய நிறுவனங்களின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்த 04 வாகனங்கள், அதாவது டபல் கப் வாகனமொன்று, சாக்கடை பவுஸர் ஒன்று, டிரக்டர் டேலர் ஒன்று மற்றும் மோட்டார் கார் ஒன்றின் உரிமையை சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வாகனங்களின் உரிமையை சபைக்கு உரித்தாக்குவதற்கு தற்போது தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என. | சபையினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற வாகனங்களை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

| | கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி (கைத்தொழில் பிரிவின் துறைசார் திட்டம்) சபையினால் 63 செயற்திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த போதிலும் அவற்றில் 08 செயற்திட்டங்கள் மாத்திரம் | திட்டம் தயாரிக்கும் போது உத்தேச தொழிற்பாடுகள் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உட்படுத்தப்பட்டிருந்த போதிலும், நாடு | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு நேரொத்தல் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிறைவேற்றப்பட்டிருந்தது. நிறைவேற்றப்படாத செயற்திட்டங்களுக்காக மற்றும் அதற்கான வருடாந்த பாதீட்டின் மூலம் ரூபா 14,195,519 இற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. | முகங்கொடுத்திருந்த பொருளாதார நெருக்கடியின் மத்தியில் விதிக்கப்பட்ட வரையறைகளின் காரணமாக 08 தொழிற்பாடுகள் மாத்திரம் முன்னேற்றம் ஒன்றை பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தது என. | |
| (ஆ) | மீளாய்வாண்டில் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் அடங்கியிருக்காத ரூபா 18,884,576 தொகைக்கான 17 செயற்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருந்ததுடன், அதற்காக வருடாந்த பாதீட்டின் மூலமும் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் அடங்கியிருக்காத ஆனால அத்தியவசியமான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களாக காணப்பட்டமையால் இந்த செயற்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டது என. | செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு அத்தியவசியமான செயற்திட்டங்கள் உட்படுத்தப்பட வேண்டியதுடன், ஆக்கபூர்வமான முகாமைத்துவ கருவியொன்றாக பயன்படுத்த வேண்டும். |

**4.2 நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள் தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரலின் படி நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகள் இனங்காணப்பட்டதுடன், 07 நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை நெருங்குவதற்காக 08 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதற்காக ரூபா 14,195,519 இற்கான செலவொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. | நிலைபேறான அபிவிருத்தி இலக்கினை அடைந்துகொள்ளும் போது பல்வேறு சவால்கள் காரணமாக அபிவிருத்தி செயற்திட்டங்களை செயற்படுத்துதல் வரையறுக்கப்பட்டிருந்தது என. | இயன்ற அளவு நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |